# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*



## என்றென்றும் உதவிடும் கர்த்தரே, நமது வாழ்வின் நல்ல பங்கு!

“நம் கண்களுக்குப் புலப்படும் ‘பல பர்வதங்களிடமிருந்து’ உதவி தேடுவது விருதா! நமது உதவியோ ஒரே கன்மலையாகிய கர்த்தரிடமிருந்தே வரவேண்டும்! ஏனெனில் “என்றைக்கும் காப்பவர்!” அவர், ஒருவரே..... ஆம், அவர் ஒருவரே நித்திய கன்மலையான உதவியாய் நமக்கு மாற வேண்டும்! (சங்.121:1–8).

அவ்வாறிருக்க, “எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும்!” எனக்கூறிய மார்த்தாளை இயேசு மறுத்தார்! பிறரிடமிருந்து உதவி எதிர்நோக்கும் வாழ்க்கை நம்மை கவலைப்பட்டு, கலங்கும் நிலைக்குத் தள்ளிவிடும் என்பதை இயேசு மார்த்தாளுக்கு கூறினார் (லூக்.10:40,41). ஆனால், மரியாளோ தேவையான உதவி ஒன்றே என இயேசுவின் பாதத்தை தஞ்சம் கொண்டாள்! இந்த பரம உதவியே “நம்மைவிட்டு எடுபடாத” நல்ல பங்கு என இயேசு உரைத்த பாக்கியம், நம் யாவருக்கும் கிட்டுவதாக!

*-tr*

பெட்டகம் 19 | பிப்ரவரி 2017 | பரல்கள் 2



## “கொந்தளிக்கும் கடலும்” அவர் பாதத்தின் கீழிருக்கும்!

பாதையை மறிக்கும் எதிர்காற்று! முன்னேறிச் சென்றிட கடினம்! இருளான நடுக்கடல்! ஆகிய சூழ்நிலையோ? இவ்வேளையில் நாம் சோதித்து அறிய வேண்டிய விடையெல்லாம் “இயேசு என்னை இந்த ஸ்தலத்திற்கு, இந்த ஊழியத்திற்கு, இந்த சூழ்நிலைக்கு அனுப்பினாரா?” என்பதுதான்! (மாற்கு.6:45). அந்த பயணத்தை, அவரே நடத்தியிருந்தால் “நான் தான்!” என அந்த சூழ்நிலையை அவரே வந்து பொறுப்பேற்றுக் கொள்வார்! (மாற்கு.6:50). ஆம், அவருடைய பார்வையில் ஜீவிப்போர் யாவருமே, ஒவ்வொரு துன்ப சூழ்நிலையிலும் “நான் தான்!” என அவர் கூறுவதை கேட்கும் பாக்கியம் பெறுவர்!

இப்போது, அவரது காலடியில் சூழ்நிலை! கொந்தளிக்கும் கடலும் அவரது பாதத்தின் கீழ்! “பயப்படாதீர்கள்!” என அவரளிக்கும் ஆறுதல்! “திடமனதாய் சந்தோஷமாயிருங்கள்” என அவர் வழங்கும் உற்சாகம்! (வசனம்.48,50). அதுமாத்திரமல்ல, நம் பயணத்தை வெற்றியாய் ‘அக்கரை’ நடத்திடும் அவரது வல்ல செயல்...... ஆம், இதற்கும் அதிகமாய் “படகில் நம்மோடு பயணித்த” ஆச்சரியம்! (வசனம்.53). தன்னை ஆண்டவராய், குருவாய் ஏற்று, அவர் நடத்தும் பாதை செல்லும் சீஷர்களுக்கே இத்தனை மகத்துவம்...... அல்லாமல், அவரது நடத்துதலை ஏற்றுக்கொள்ளாத மற்ற ஜனங்களையோ, அவர்களுடைய வழிக்கே அனுப்பிவிட்டார்! என 45–ம் வசனம் துயரமுடன் கூறுகிறது!

*-Ed*

### முக்கிய அறிவிப்பு

2017 ‘பரலோக பொக்கிஷங்கள்’ வருட சந்தா ரூ.120/– M.O. செய்து அல்லது ஆன்லைன் மூலம் புதுப்பித்துக் கொண்ட அனைவருக்கும் நன்றி. புதுப்பிக்காதவர்கள் பிப்ரவரி 15 தேதிக்குள் புதுப்பிக்க வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.100/– அயல்நாடு ஒரு பிரதி ரூ.700/– அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும். புதிதாய் வாங்குபவர்கள் ‘புதிது’ என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும் ! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!


கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306, (H) 0452 - 2661177
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, cfcindia.com/tamil

## 'சிலுவையின் வழி' கேட்டவர்கள் பலர்! கண்ணார கண்டவர் சிலர்!!

**நீ**ங்கள் மனந்திரும்பி, உங்கள் வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவிடம் அர்ப்பணித்து, பரிசுத்தாவியின் அபிஷேகத்தையும் பெற்றிருப்பீர்களென்றால், எனக்கும் உங்களுக்கும் தேவன் இந்த வாழ்க்கையில் ஓர் பயிற்சித்திட்டத்தை வைத்திருக்கிறார் என்ற உண்மையை நன்கு அறிந்துகொள்ளுங்கள்.

அப்பயிற்சித்திட்டத்தின் நோக்கம் யாதெனில், வருஷங்கள் செல்லச் செல்ல நாம் இயேசுவைப் போல் மாறுவது தான்!

எனவே, நம் வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு சூழ்நிலைகளும், நிகழ்ச்சிகளும் தேவனுடைய பயிற்சித்திட்டத்திற்கு உட்பட்டதே ஆகும். காரியம் இப்படியாய் இருப்பதால், இனியும் நாம் சூழ்நிலைகளுக்காக குறைகூறாது இருப்போமாக!

நீங்கள் பிறக்கும்படி அனுமதித்த உங்கள் குடும்பத்திற்காகவும், தேவனை குறை சொல்லாதீர்கள். அல்லது நீங்கள் வாழும் ஊருக்காகவோ அல்லது உங்களைச் சுற்றியுள்ள அண்டை வீட்டாருக்காகவோ அல்லது நீங்கள் பிறந்த குறிப்பிட்ட சமுதாயத்திற்காகவோ தேவனை குறைசொல்ல வேண்டாம்! இவ்வாறெல்லாம் இருப்பதற்கு, தேவனே உங்களுக்கு திட்டம் தீட்டி அவைகளை அனுமதித்திருக்கிறார். நம்முடைய கவனமெல்லாம் "தேவனுடைய பயிற்சித்திட்டம்..... இயேசுவைப் போல் மாறவேண்டும்!" என்ற ஒன்றே ஒன்றுதான்!!

நம் யாவருக்குமே இலக்கு ஒன்றுதான்! அந்த இலக்கு இயேசுவைப்போல் மாறுவதே ஆகும்!! ஆனால் என்னுடைய வாழ்க்கையில் தேவன் இடைபடும்விதமோ, உங்களுடைய வாழ்க்கையில் தேவன் இடைபடும்விதத்தைக் காட்டிலும் வித்தியாச மானதாய் இருக்கலாம். **என்னுடைய வாழ்க்கையில் உடைபடவேண்டிய வலிமையான சுயம் எது? என்பதை தேவன் அறிவார்!** அதேபோல உங்களுடைய வாழ்க்கையில் உடைபட வேண்டிய வலிமையான சுயம் எது? என்பதையும் தேவன் அறிவார்! உதாரணமாய், சிலருக்குப் பண ஆசை வலிமையான சுயமாய் இருக்கக் கூடும். சிலருக்கு, பாலிய இச்சை வலிமையான சுயமாய் இருக்கக்கூடும். அவரவருடைய சுயத்தின், மாம்சத்தின் வலிமைக்கு ஏற்றாற்போலவே

தேவன் சூழ்நிலைகளை ஏற்படுத்தித் தருகிறார்.

நீங்கள் பொறுமையை கற்றுக் கொள்வதற்கென்றே கடினமான அண்டை வீட்டுக்காரரை அனுமதித்திருப்பார்..... அல்லது, நீங்கள் தாழ்மையைக் கற்றுக்கொள்வதற்காகவே ஓர் கடினமான மாமியாரை உங்களுக்குத் தந்திருப்பார். பார்த்தீர்களா, இவைகள் யாவும், நீங்கள் இயேசுகிறிஸ்துவைப்போல் மாறுவதற்காக அளிக்கப்பட்ட பொன்னான சந்தர்ப்பங்களே ஆகும்!!

ஆம், நீங்கள் ஓர் சொகுசான சாய்வுநாற்காலியில் அமர்ந்து கொண்டு இயேசுவைப்போல்மாறிட ஒருக்காலும் முடியாது! இப்பூமியில் பிதா இயேசுவுக்கு அளித்த பயிற்சித்திட்டமும் அவ்வாறு இருக்கவில்லை!! மாறாக, "உபத்திரவங்கள் மூலமாகவே..." இயேசு தன் பயிற்சியைப் பெற்று பூரணரானார் என எபிரெயர் 2:10-ம் வசனம் கணீரென ஒலிக்கின்றது!

சில தாய்மார்களுக்கு அதிகமான தொந்தரவு கொடுக்கும் அநேகம் பிள்ளைகள் இருக்கலாம். இவ்வித சூழ்நிலையில் என்ன செய்வீர்கள்? தேவனிடம் சென்று முறையிட்டு குறைசொல்வீர்களோ? அப்படிச் செய்வது மதியீனமாகும். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் "ஆண்டவரே, இந்தப் பிள்ளைகள் யாவரையும் எனக்கு நீர்தான் தந்தீர். அதில் எனக்கு, ஒரு சந்தேகமும் இல்லை. இவர்கள் மூலம் எனக்கு அநேக பாடுகளும் உண்டாகிறது. ஆனால், ஆண்டவரே! நீர் இந்தப் பாடுகளை என் வாழ்வில் பயன்படுத்தி என்னை, இயேசுவைப் போல மறுரூபமாக்கி விடும்!" என ஜெபிப்பதே உகந்ததாகும்.

வாழ்க்கையில், நம் எல்லோரையுமே துன்பங்கள் சந்திக்கின்றன. சிலருடைய துன்பங்கள் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளக்கூட முடியாத அளவுக்கு மிகக்கொடியதாய் இருக்கலாம். ஒருவேளை நீங்கள் உங்கள் பிள்ளையையோ அல்லது கணவரையோ.... சாகக்கொடுத்து இழந்திருக்கலாம். சுகம்பெறாத குழந்தையை உடையவர்களாயும் நீங்கள் இருக்கலாம்.....

இவையாவும் உங்கள் நெஞ்சத்தை அழுத்தும் பாரங்களாகவே இருக்கிறது. இவ்வேளையில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இனி மீதமுள்ள காலமெல்லாம் தேவனை குறைகூறிக் கொண்டு இருக்கப்போகிறீர்களோ? அவ்வாறு நீங்கள் செய்துவிட்டால், உங்களைக் கிட்டிச்சேர்ந்த **பாடுகள் அனைத்தையும் வீணாக்கிப் போடுவீர்கள்!**

உங்கள் சுபாவத்தை, கிறிஸ்துவுக்கு ஒப்பாய் பொன்னைப் போல்

புடமிடுவதற்கென்றல்லவா அத்தனை பாடுகளையும் தேவன் உங்கள் வாழ்க்கையில் அனுமதித்திருந்தார்!? ஆனால், நீங்களோ பாடுகளின் மத்தியில் **குறைகூறி மனக்கசப்படைந்தபடியால், தேவனுடைய நோக்கம் உங்களில் நிறைவேற முடியவில்லை!**

தன்னைக் காட்டிக்கொடுத்த அல்லது முதுகுக்குப் பின்னால் வந்து குத்திவிட்ட யூதாஸை, "சிநேகிதனே!" என இயேசுவால் எவ்வாறு கூறமுடிந்தது? ஒரே ஒரு காரணம்தான்! ஆம், தன்னுடைய நன்மைக்காகவே இவைகளைப் பிதா அனுமதித்திருக்கிறார் என்ற உண்மையை இயேசு நன்றாய் அறிந்திருந்தார். இந்த உண்மையை நீங்களும் இயேசுவைப் போலவே நன்றாய் அறிந்திருந்தால் மாத்திரமே, உங்களுக்குத் தீமை செய்யும் ஒருவரை "சிநேகிதனே!" என அழைத்திட முடியும். அவ்வாறில்லாமல், இவ்வுலகில் யாரேனும் ஒருவரையாகிலும் "சத்துரு!" என நீங்கள் அழைத்தால், நீங்கள் ரோமர் 8:28-ம் வசனத்தைக் கடுகளவுகூட விசுவாசிக்கவில்லை என்பதை நன்றாய் உணர்ந்து கொள்ளுங்கள்.

இவ்வுலகில் எனக்கு ஒரே ஒரு சத்துருதான் இருக்க வேண்டும் என நான் பல வருடங்களுக்கு முன்பாகவே தீர்மானித்துவிட்டேன். அச்சத்துரு "பிசாசு" மாத்திரமே! ஆகவே, நான் கோபமும் பகையும் கொண்டிட இவ்வுலகில் ஒருமானிடன் கூட எனக்கு இல்லை!

நம்மில் அநேகரிடத்தில் காணப்படும் வீழ்ச்சிக்குக் காரணம் என்னவெனில், சாத்தானிடத்தில் கோபமும், பகையும் கொண்டிடத் தவறியதாலேயே! காலாகாலமாய் உங்கள் துப்பாக்கி முனையை 'மனிதர்களை நோக்கி நீங்கள் சுட்ட' அத்தனை 'புல்லட்டுகளையும்' **நீங்கள் சாத்தானை நோக்கிச் சுட்டிருந்தால்,** உங்கள் வாழ்க்கையில் ஜெயஜீவியம் என்றைக்கோ கிட்டியிருக்கும். ஆனால் நீங்களோ, மனிதர்களைக் குறிவைத்து 'புல்லட்டுகளை' வீணாக்கி விட்டீர்கள்!

இனிமேல் நம்மைப் பொருத்தவரையில் யூதாஸ்காரியோத்தைப் போல் காட்டிக்கொடுக்கும் ஒருவர் 'நம் சிநேகிதரே' ஆவார்! ஏனெனில், நாமோ இப்போது ரோமர் 8:28-ம் வசனத்தை விசுவாசித்து விட்டோம். இவ்வுலகின் எந்தப் பகுதியிலிருந்தும், எந்த மானிடனும், இனி நமக்கு "ஒரு தீமையையும்" செய்துவிட முடியாது! இது அனைத்தும் 'சொல்லில்' ஏற்றுக்கொண்டு, நாங்களும் விசுவாசிக்கிறோம் எனக் கூறுபவர்கள் இன்று அநேகர் உண்டு! ஆனால் "**குருவின் சிலுவையின் பாதையை**" கண்ணாரக் கண்டு நடப்பவர்கள் எங்கே? இந்த ஜீவவழியை கண்டுபிடித்தவர்கள் சிலர், வெகுசிலர்!

– சகரியா பூணன்

## இந்த பிரசங்கி யாரை குறிவைத்து பிரசங்கித்தார்?

*ஒரு சபையில் செய்தி வழங்க எழுந்து நிற்பவர், கூடியிருக்கும் அனைத்து ஆத்துமாக்களின் நன்மையை இலக்காய் வைத்தே பிரசங்கிக்க வேண்டும். அது, பரத்திலிருந்து உண்டாகும் தீர்க்கதரிசன வார்த்தையாக இருந்தாலும் நல்லதுதான் அல்லது தன் சொந்த ஜீவிய ஊற்றுக்கண்ணிலிருந்து பேசுவதாயிருந்தாலும் நல்லதுதான்! அதன் விளைவாய் ஊழியத்தின் பணி நிறைவான பலன் தரும். அமர்ந்திருந்து கேட்டவர்கள் அனைவரும், திவ்ய சுபாவத்தில்.... அவரவர்கள் சுபாவத்திலிருந்து இன்னும் கொஞ்சம் தெய்வீகத்தில் வளர்ந்திருப்பார்கள். இது ஒன்றுதான் செம்மையான பிரசங்க ஊழியம்!*

**அதற்குப் பதிலாக மேடையில் நின்றுபேச வந்தவர் யாரோ சில நபரை குறிவைத்து பேசக்கூடாது! அவரை இரகசியமாய் நிந்தனைக்கு உட்படுத்தலாம் என்று எண்ணியும் பேசக்கூடாது. இதுபோன்ற குணாதிசயங்கள் உயிருள்ள சபைக்கு உகந்ததல்ல, அல்லவே அல்ல! அது பேய்கள் தாராளமாய் நடமாடும் ஒரு கூட்டத்திற்கு மாத்திரமே உரியது என்ற உண்மையை இன்று அறிந்து கொள்ளுங்கள்!**

*இந்த கொடுமைக்கு விலகிய பிறகு.... யாரோ ஒருவரது செயல் அல்லது அனேகரை உட்படுத்திய ஏதோ நிகழ்ச்சியின் மூலமாய்* **'ஓர் சத்தியம் வெளிப்பட்டால்'** *அதை பிரசங்க மேடையில் நிற்பவர், மிகுந்த பொறுப்புடன் வெளிப்படுத்தி காண்பிக்க வேண்டும். அதுபோன்ற சத்தியம் மாத்திரமே, ஜனங்களுக்கு வெளிச்சத்தைக் கொண்டு வரமுடியும்!*

*பிரசங்க மேடையில் நிற்பவர், தன்னுடைய ஜீவியத்திலிருந்தும் ஒரு வெளிச்சத்தை எடுத்து பேசலாம்.... ஆனால்,* **தன்னை குறிப்பிடாமலே** *அந்த வெளிச்சத்தைப் பேசுவது நல்லது. இவ்வித பிரசங்க ஊழியமே, அங்கு அமர்ந்திருக்கும் கனம் உள்ளவர்களுக்கோ அல்லது பாவிகளுக்கோ 'இரகசியமான பாதிப்பில்லாமல்' ஆண்டவருடைய செய்தியை கொண்டு சேர்க்கும்! இவ்வித நேர்மையான தேவ செய்தியில், யாதொருவர் மீதும் யாதொரு* **மறைவான தாக்குதலும்** *தோன்றுவதில்லை. அதற்கு பதிலாக, யாரோ ஒருவரினிமித்தம் அல்லது ஒரு சம்பவத்தினிமித்தம் ஏற்பட்ட தாக்கத்தினால் பிரசங்க மேடையில் நின்று பேசுவது மாயையும், மதியீனமுமான செயலாகும்!*

*இருப்பினும், இப்படித்தான் நீங்கள் ஏற்கனவே மதியீனமாய் பிரசங்கித்திருந்தால், உங்கள் தவறு உங்களுக்கு வெளிச்சத்தைக்*

கொடுப்பதை மனந்திரும்பி ஏற்றுக்கொண்டு, இனிமுதல் பக்தி விருத்திக்கு உகந்தவாறு பேச தீர்மானம் எடுங்கள்! அவ்வித நிலையில் நீங்கள் தேவனிடமிருந்து மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் பெறுவீர்கள். என்னுடைய மதியீனத்தை, நான் வெளிச்சத்தில் கண்டு கொள்வது என்னுடைய நன்மைக்கும் என்னுடைய இரட்சிப்புக்கும் ஏற்றதாகவே இருக்கும். இவ்வாறு திருந்தி இரட்சிப்படைந்த நான், ஜனங்களுக்கு பிரயோஜனமான ஊழியத்தில் மீண்டுமாய் பயன்படுவது, இன்னமும் மிகுந்த நல்லதென்றே சொல்ல வேண்டும்.

இதற்கு மாறாக, முன்பு நான் பிறரை தாக்கிப் பேசிய போது, என்னை மதியீனமாய் துதிபாடிய மக்களால் உண்டான என் கனத்திற்கு மனநோவு ஏற்பட்டுவிட்டதாக நீங்கள் எண்ணத் தொடங்கினால், .... நீங்கள் பேசுவதைவிட அமைதியாய் இருப்பதே நல்லது!

ஆகவே, யாரையோ இலக்காய் வைத்து பேசும் உங்கள் பாணி ஒழியட்டும்! அது மாயையும் இருளும் ஆகும். அதைவிட மோசமாய் நீங்கள் இலக்காய் வைத்து பேசியவருக்கு நியாயத்தீர்ப்பு வர காத்திருப்பவராய் இருந்தால்..... ஓ பிரசங்கியே, உங்கள் இருள் இன்னமும் மோசம் என்பதை அறியுங்கள்!

ஆகவே, நீங்கள் யாரை இப்போது இலக்காய் வைத்து பேச வேண்டும்? வாஞ்சையுடன் வார்த்தையை ஏற்றுக்கொண்டு, அந்த சத்தியத்தை இருதயத்தில் பாதுகாத்து, கீழ்படிந்து நடக்கும் மாந்தர்களுக்கு மாத்திரமே பேசுங்கள்! அந்த பிரசங்கியின் மனப்பூர்வமான நோக்கம் என்னவாயிருக்க வேண்டும்? எவ்வளவு அதிகமான இரட்சிப்பு, எவ்வளவு அதிகமான ஜனங்களுக்கு போக வேண்டுமோ.... இந்த வாஞ்சை மாத்திரமே உங்கள் இலக்காய் மாறட்டும்! இந்த விதமாகவே சபையிலிருந்து ஊழியம் செய்கிற யாவரும் கைகொள்ள வேண்டும். இதற்கு மிஞ்சிய அனைத்தும் தீமை, முழு தீமை!

யாரோ ஒருவர் அல்லது ஒரு குழுவினர் மீது உங்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தை, மனதில் வைத்து, அதை மானசீகமாய் மேடையில் பேசுவது அல்லது முழு வெளிச்சத்தை காணாமலே நியாயந்தீர்த்து மேடையில் பேசுவது, கிறிஸ்துவின் சரீரத்திற்கு உள்ள வசீகரம் அல்ல! அது, நரக பேய்களுக்கு சொந்தமானதாகும்!! அனைத்து வெளிப்பாடும் வெளிச்சம்தான்! அவரவர்களுக்குரிய பிரயோஜனத்தினிமித்தமே ஆவியின் வெளிப்பாடு வழங்கப்படுகிறது!

– எலியாஸ் அஸ்லாக்ஸன்

## 'ஒரேவித சமம்' அல்ல! 'ஒரு மனதே' ஐக்கியத்தின் இரகசியம்!

**வே**தம் கற்றுக்கொடுக்கும் ஐக்கியம், முழு இருதயமான தெய்வ அன்பிலிருந்து பிறப்பதே ஆகும். அப்போது மாத்திரமே, அந்த கிறிஸ்தவ ஐக்கியத்தில் 'மாறாத மனஉருக்கம்' உண்டாக முடியும். இதுபோன்ற **தூய ஐக்கியம் தேவனுடைய கிரியையின் மூலமாகவே** நடைபெற வேண்டும். மேலும், அந்த கிரியை ஒருவனுடைய **ஆத்துமாவிற்குள்தான்** நடைபெறமுடியும்! அவ்வாறு ஏற்பட்டுவிட்ட ஐக்கியத்தில், பல்வேறு வேற்றுமை கொண்ட சகோதரர்கள் கூடி வந்தாலும், ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்றான ஐக்கியம் அங்கு மலர்ந்திட முடியும். ஒரு பக்தன் கூறும்போது, 'ஸ்திரமான ஐக்கியம்' (Solidarity) உருவாக்குவதாகக் கூறி ஒருவன் தன் சுய - பெலத்தில் முயலும்போது அங்கு ஏராளமான பிழை ஏற்பட வாய்ப்பு உண்டு என கூறினார். அது எப்படியென்றால், வேறுபாடுகள் கொண்ட அனைவரையும் ஒரே டிகிரி அளவில் பனித் தூண்களாய் மாற்றும் **மனுஷீக ஸ்திரத்தன்மை!** என எச்சரிக்கையாய் குறிப்பிட்டார்.

இதுபோன்ற "உறைந்த பனித்தூண்களின் ஐக்கியம்" உருவாக்குவதற்கு ஒரே ஒரு பிரமாணம்..... 'எனக்கு' அல்லது 'என் அறிவுரைக்கு' யாரும் ஒருபோதும் எந்த மறுப்பும் கூறாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கடினபிரமாணமே யாகும். இந்த அடிப்படைக்கு ஒத்து கொண்டவர்கள் மாத்திரமே அவர்களின் 'மனுஷீக ஐக்கியத்தில்' இணைந்திருக்க முடியும் என்ற ஸ்திரமான.... ஆனால், உயிரற்ற ஓர் ஐக்கியம்!

ஆனால் பேதுரு அப்போஸ்தலன் கூறும்போது, உத்தமமான கிறிஸ்தவ சகோதரர்கள் தங்கள் கிறிஸ்தவ ஐக்கியத்தில் **'ஒரே மனதில்தான்'** (ONE MIND) ஐக்கியமாய் இருந்திட முடியும் என்ற உண்மையை விளக்கினார். இங்குதான் எழுத்தின் விளக்கத்தின்படி கூட 'மனப்பூர்வமான' ஐக்கியமாய் திகழும்! இந்த ஆவிக்குரிய மனப்பூர்வம் "இப்படித்தான் இருக்க வேண்டும்.... அப்படி இல்லை" என்ற கட்டுகோப்பிற்கோ அல்லது பயமுறுத்தலுக்கோ உட்படுவதில்லை. ஆகவே, 'ஒரே விதமாக இருக்க வைப்பது' ஆவிக்குரிய மனப்பூர்வம் அல்ல!

ஆனால் இன்று பெரும்பாலான சபைகள் "வேற்றுமையில்லாத சமமாய்" இருப்பதுதான் மனப்பூர்வமான ஐக்கியம் என தவறாய் எண்ணி கொள்கிறார்கள். இன்னும் சில சபைகள் வஞ்சனைக்கு உட்பட்டு, வெளித்தோற்றத்திலும் சமமாய் இருப்பதற்கு 'ஆடை' போன்ற நடைமுறை காரியங்களில் கடின ஒற்றுமையை

திணிக்கிறார்கள்! இவ்வாறெல்லாம், ஏதோ ஒரு வகையில், சபையில் இவர்களாகவே ஒரு ஒற்றுமையை ஏற்படுத்த முயல்வது அல்லது அதுபோன்ற மனுஷீக ஒற்றுமையை கட்டிக்காப்பதாகக் கூறும் முயற்சிகள் இந்த உலகம் கூறும் ஓர் போலியான ஒற்றுமையைத்தான் உண்டாக்கும்!

ஒரு பள்ளியின் சீருடை அல்லது படை வீரர்களின் சீருடை எனக்கூறும் 'ஏக சம்மதத்தை' ஆவிக்குரிய சபையில் கொண்டுவர முயல கூடாது. அவ்வாறு சீருடை அணிந்தவர்களெல்லாம் நல்ல மாணாக்கர்களாய் இருப்பதில்லை! அல்லது சீருடை (Uniform) தரித்த எல்லா வீரர்களும் நல்ல போர்ச்சேவகர்களாயும் இருப்பதில்லை! அப்படியிருக்க நீங்கள் உருவாக்கி வைத்த சம - சீருடை ஒற்றுமையில் ஒரு பிரயோஜனமும் இல்லை. ஆகவே ஒரு சபையின் மூப்பர் உருவாக்க விரும்பும் அல்லது திணிக்க விரும்பும் 'வேற்றுமையில்லாத - சமம் (Uniformity)' மிகப்பெரிய தோல்வியே ஆகும். ஆம், இன்றும் என்றும் ஐக்கியத்தின் இரகசியம் **மனப்பூர்வமானது** - Unity of Heart மற்றும், **ஒருமனம்** Unity of mind கொண்டது!! ஆம் அது ஒன்றே இயேசு விரும்பும் தூய ஐக்கியம்!

– *A.W.டோசர்*

---

## என்மீது கொண்ட உம் நேசத்தை ஒப்பிட்டு, சோகமானேன்!

***நா***ன் என் கணவருடன் தொடர்ந்து சென்ற **'டுரைன்'** பட்டணத்து பயணத்தில் மிக பயங்கரமான விபத்து ஒன்றை சந்தித்தேன். அந்த விபத்து உயிர் பிழைப்பதற்கு அபூர்வமாய் இருந்தது. சாலையில் சம்பவித்த அகோரத்தை காட்டிலும், அதைவிட வலிமையாய் என்னை நான் தேவனுக்கு ஒப்புவித்த வாழ்க்கை இருந்தது.... ஆகவே எனக்கு சிறிதுகூட அச்சம் ஏற்படவில்லை. **'லாயிர்'** ஆற்றுக்கு மேலாக ஓர் குறுகிய பாலத்தில் நாங்கள் பயணித்த வாகனம் சென்றது. அது சென்ற வேகத்தில், தடுப்பு கரை உடைந்து வாகனத்தின் பாதி பகுதிக்குமேல் கீழே உள்ள ஆற்றை நோக்கி தொங்கிக் கொண்டிருந்தது. வாகனம் கீழே விழுந்து விடாதபடி தாங்கிக்கொள்ள கொஞ்ச பேர் மாத்திரமே அங்கே இருந்தனர். வாகனத்துக்குள் இருந்த அனைவரும் 'மரண ஓலம்' இட்டனர்.

அந்த கொடிய சமயத்திலும், என் உள்ளத்தில் விவரிக்க முடியாத அமைதியை எனக்கு தேவன் தந்தார்! இந்த விபத்தோடு என் வாழ்க்கை முடிந்துவிட்டால், நான் கர்த்தருடைய சமூகத்தில் களித்திருப்பேன் என்ற எண்ணம் என் மனதை ஆண்டுகொள்ள, மரணத்தின் மூலமாய் 'பரலோகத்தின் வாசல் திறப்பதை' ஆர்வமுடன் எதிர்நோக்கியிருந்தேன்!

இந்நிலையில் ஆச்சரியப்படத்தக்க வகையில் வாகனம் மீண்டும் சாலையில் நிறுத்தப்பட்டு, யாவரும் உயிர் பிழைத்தோம்.

நான் ஊருக்கு வந்தவுடன் திருமதி. கிரங்கர் அம்மையாரை பார்த்தேன். நடந்த கோர சம்பவங்களையும் விவரித்தேன். ஆண்டவரின் அன்பை ருசிப்போருக்கு இதுபோன்ற நிகழ்ச்சிகள், ஆரம்ப ருசிகள் மாத்திரமே எனக் கூறி என்னை உற்சாகப்படுத்தி னார்கள். நான் மாயையிலிருந்து விலகி என் கழுத்தை அடைத்துப் போட்டிருந்த நகைகளை நான் புறக்கணித்தபடியால், அந்த வெற்றிடமான கழுத்தை, என் உயர்த்திய ஆடையால் நிரப்பி தைத்துக்கொள்ள நல்ல ஆலோசனை கூறினார்கள். அதுமுதல், தொடர்ச்சியாக என் கழுத்தை மூடிக்கொள்ளும்படியான ஆடையை நான் உடுத்தினேன்.

ஒரு சில மாதங்கள், தேவன் தனது சிட்சையை எனக்கு நிறுத்தி வைத்ததைப் போலவே கண்டேன். ஆனால் இந்த சுகமான நாட்களில், அவரது கிருபையும், பிரசன்னமும் என்னைவிட்டு விலகியது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. இந்நிலையை சோதித்தறிந்த ஆண்டவர், **என்னை மீண்டுமாய் சிட்சிக்கத்** தொடங்கினார். இப்போது, நான் தடுமாறிய பகுதிகள் என் கண்களுக்கு முன்பாக தோன்றத் தொடங்கின. நான் இன்னமும் ஆவிக்குரிய பெலவீனமாய் இருக்கிறேனே என வருந்தினேன்.

**என்னையே நான் அருவருத்து, "ஒரு துன்பமும் இல்லாத சுயாதீனத்தில் நான் அடையும் வீழ்ச்சியை விட" கொடிய சிறையில் அடைக்கப்பட்டு, துன்பத்தின் மத்தியில் அவரது சமூகத்திலிருப்பதே நலம் என்று எண்ணினேன்!**

திவ்ய அன்பு என்னை பரிவுடன் உள்ளே இழுத்து கொள்ள முயற்சிப்பதும், மாயை என்னை வெளியே இழுத்து வீழ்ச்சியடைய செய்ய முயற்சிப்பதும்.... ஆகிய இந்த போராட்டம் எனக்குள் இருந்ததை கண்டேன். போராட்ட வேளையில் 'உறுதியற்ற நிலை' எனக்குள் இருப்பதைக் கண்டு திகைத்தேன்!

என் உள்ளமோ "ஓ தேவனே, என் இருதயத்தில் தோன்றும் போலியான இந்த மாயையை முற்றிலும் அழித்துவிட உமக்கு பெலன் உண்டுதானே?" என சோகத்துடன் பிதற்றினேன். ஏனென்றால் அவ்வப்போது தோன்றிய மாயைகளில், என் இருதயம் இன்னமும் தேவனை விட்டு தடம் புரளுவதைக் கண்டதால் அவரிடம் அபயமிட்டேன். ஆனால் தேவனோ, என் பிதற்றலை ஒரு பொருட்டாய் எண்ணாமல் **'மாறாத அன்பினால்'** அவரது மார்பில் என்னை சேர்த்துக் கொண்டார். நான் மாயைக்குள் அலைந்து

திரிந்ததைப்போல் தோன்றினாலும், அவரது **சிட்சையின் மிலாறு** ஒன்றே என்னை சீர்திருத்த போதுமானதாய் இருந்ததைக் கண்டேன். நான் என் மீது கொண்டிருந்த அக்கறையை விட அதிக அக்கறையை தேவன் என் மீது கொண்டிருக்கிறார் என்பதை, அவரது சிட்சையின் மிலாறு எனக்கு வெளிப்படுத்தியது. இதுபோன்ற உச்ச நிலையில், என் இருதயத்தில் அதிகமான வருத்தமும், தேவன்மீது பொங்கிய அன்பும் சேர்ந்து, புரண்டு ஓடியது. என்மீது இவ்வளவு கிருபையை பொழிந்த ஆண்டவருக்கு, **எவ்வளவு சீக்கிரமாய் குறைபேசி விட்டேன்** என்ற எண்ணம் என்னை சோகப்படுத்தியது. தேவனை அறியாதவர்கள், தங்கள் பாவங்களால் இரட்சகரின் மனதை நோக வைக்கிறார்கள் என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை! ஆனால், தங்கள் இருதயப் பூர்வமாய் தேவனை நேசித்து அவரது அன்பை ருசித்தவர்களின் மனது, பொல்லாத உலகின்மீது சாய்ந்து கொள்ள நாடுவது .... "தேவ அன்பிற்கு ஏற்பட்ட கொலைபாதக செயல்" என்றே நான் உணர்ந்தேன்.

"ஓ கர்த்தாவே, இத்தனை இழிபிறவியான என் மீது நீர் அருளிச் செய்த உமது அன்பும், பிரசன்னமும் மகா அதிசயமாய் நான் காண்கிறேன். நான் எழுதும் இந்த என் வாழ்க்கை சரிதையை கவனமாய் வாசிக்கும் யாராயிருந்தாலும், **தேவரீருடைய பகுதியில்** நன்மையையும், இரக்கத்தையும், அன்பையும் மாத்திரமே கண்டிருப்பார்கள்.... ஆனால் **என்னுடைய பகுதியிலோ** பெலஹீனமும், பாவமும், அவிசுவாசமும் மாத்திரமே கண்டிருப்பார்கள். ஓ தேவனே..... என் பெலஹீனத்தையும், என் தகுதியற்ற தன்மையுமே தவிர நான் மேன்மை பாராட்டுவதற்கு ஒன்றுமில்லை! என்னையும் உமது நித்திய **மணவாளியின் ஐக்கியத்தில்** சேர்த்துக் கொண்டீரே, உமக்கு நான் என்ன கொண்டு வந்தேன்? மணவாளியாகிய என்னிடம் இருந்ததெல்லாம் பெலஹீனமும், பாவமும், வேதனையும் மாத்திரமே! நான் என் செய்வேன்?..... என்னையே முற்றிலும் உமக்குத் தந்து விடுவது ஒன்றே என் பெருமகிழ்ச்சி!

என்னை நீர் நடத்தியவிதம் "ஒரு மகத்துவமுள்ள இராஜா ஓர் அடிமையின் அடிமைத்தனத்தை மறந்துவிட்டு, அந்த ஏழை அடிமையை திருமணம் செய்ய" நாடி வந்ததாகவே காண்கிறேன்!

இந்த ஏழைக்கு "உமது கண்களுக்குப் பிரியமான சகல ஆபரணங்களையும் அணிவித்து மகிழ்ச்சி அடைகிறீர். என்னுடைய குறைவான தவறுகளையும், என் அறியாமையின் மோசமான புலம்பலையும், தாராளமாய் மன்னித்துவிட்ட தயவையும் நான் காண்கிறேன். என்னுடைய தரித்திரம், உம்மால் ஐஸ்வரியமாக்கப்

பட்டுள்ளது! என்னுடைய சொல்லிமுடியாத பெலஹீனமும், உம்மால் பெலன் கொண்ட மனுஷியாய் என்னை மாற்றிவிட்டது. இத்தனை பாக்கியம் பெற்ற ஒரு ஆத்துமா, உமது திவ்ய நோக்கங்களை முழு பெலன் கொண்டு திருப்தி செய்ய நாடாதிருப்பது எப்படி? துறவரத்தால் உம்மை பிரியப்படுத்த பார்த்தேன், ஆனால் அது எனக்கு திருப்தியாகவில்லை! அது, எரிந்து கொண்டிருந்த நெருப்பை, இன்னமும் தூண்டும் ஒரு சில துளிகளாய் மாறிப் போய்விட்டதே!" என்றே வியந்தேன். இப்போது, தேவனையும் என்னையும் சேர்த்து வைத்துப் பார்த்த எனது கண்ணோட்டத்தில் "ஓ அதிசயமான தேவ அன்பே, இந்த நிர்ப்பந்தமான ஏழையை நீர் நடத்திய விதம் மகா ஆச்சரியம்!" என என் மனதார வியந்த அதே வேளையில், என்னை நான் கண்ட பார்வையோ "ஓ நன்றியில்லாத தீய ஆத்துமாவே, சிறிதுகூட உனக்கு இணையாய் வைத்திட முடியாத உன் நேசரின் நன்மைகளைப் பார்"..... என கண்ணீர் மல்க வியப்பில் ஆழ்ந்து, அவரது நேசத்தால் சோகமானேன்!

– மேடம் குயான்

---

## பாவத்தை வேரோடு சாய்க்க முடியாத சபையும், ஓர் சபையாகுமா?

**கி**றிஸ்தவத்தின் சாரமாய் இருப்பதெல்லாம் "அந்தந்த காலத்தில் வாழ்ந்த, வாழும் விசுவாசிகள் **தேவனுடைய உதவியைக் கொண்டு** அவருடைய கண்களுக்கு முன்பாக நித்தியத்திற்காக மாத்திரமே வாழ்ந்திட வேண்டும்!" என்பதுதான்! இந்த எளிய புனித வாழ்வு நம் எல்லோருக்கும் சொந்தம்.

ஆனால், இன்றைய விசுவாசிகள் இந்த உணர்வை மனதில் வைத்திருக்க வேண்டுமே? **நித்திய தேவனின் கண்களுக்கு முன்பாக** ஒவ்வொரு மணிதுளிகளையும் வைத்து வாழ்வது, மாபெரும் சிலாக்கியம். அதேபோல் தங்கள் வாழ்வில் நிகழும் ஒவ்வொரு செயலையும், **நியாயத்தீர்ப்பின் வெளிச்சத்தில்** வைத்தும் வாழவேண்டும்! அது, ஒரு பொருளை விற்றாலும் அல்லது ஒரு ஜெபத்தை செய்தாலும் அவருடைய கண்களுக்கு முன்பாகவே செய்திட வேண்டும். நாம் தேவனுக்கென்று மனப்பூர்வமாய் கொடுப்பதும் அல்லது அழியும் ஆத்துமாக்களை மனதில் வைத்து நாம் பிரசங்கிப்பதும் நியாயசனத்தின் வெளிச்சத்தில் இருக்க வேண்டும்! மேலும், நாம் தேவனுக்கு செய்திடும் ஊழியமும் இவ்வாறாகவே இருந்தால், பரிசுத்த ஆவியின் எழுப்புதல் நிச்சயமாய் நம்மை நோக்கி விரைந்து வரும்.... அந்த எழுப்புதல், பூமியை அதிரப்பண்ணும். பல்லாயிரக்கணக்கான

விலையேறப்பெற்ற ஆத்துமாக்களை கட்டவிழ்க்கும்!

இன்று எங்கு பார்த்தாலும் 'நான் என்னும் அகங்காரம்' தலைவிரித்து ஆடுவதும், கட்டுப்பாடுகளை மீறுவதும், போர் ஒப்பந்தத்தை நாட்டுக்கு நாடு துச்சமென அவமதிப்பதும், உலகமெங்கும் ஓர் ஸ்திரமற்ற ஆட்சியும், கம்யூனிசம் தலைதூக்கி வருவதையும், உலகத்தை தன் அதிகார வேட்கையால் ஆட்டிப் படைக்கத் துடிக்கும் ரோமாபுரியின் தந்திர செயலும்.... நம்மை அதிர்ச்சியான விழிப்பிற்கு கொண்டு வர வேண்டுமல்லவா?

இந்த உலகத்தில் மூன்றுவிதமான மக்கள் மாத்திரமே உள்ளனர். முதல் ரகத்தினர், பயப்படுகிறவர்கள்! இரண்டாம் ரகத்தினர் அஞ்சுவதற்கு தயங்குபவர்கள்! மூன்றாவது ரகத்தினர் வேத புத்தகத்தை அறிந்தவர்கள்! இந்த உலகம் இவ்வாறு மூன்று விதமாய் வரையறுக்கப்பட்டதில், உண்மை இருக்கத்தான் செய்கிறது. உதாரணமாய், **சோதோம் கொமாரா பட்டணத்தில் வேதபுத்தகம்** இல்லை! பிரசங்கிகள் இல்லை! ஒரு சுவிசேஷபிரதி கூட இல்லை! ஜெபகூட்டங்கள் இல்லை! ஒரு சபை கூட இல்லை! இதன் விளைவாய், அந்தப் பட்டணம் அழிந்தது!! ஆனால் இன்றோ இலட்சக்கணக்கான வேதாகமங்கள் உள்ளன, ஆயிரக்கணக்கான சபைகள் உள்ளன. பிரசங்கிகளுக்கும் பஞ்சமே இல்லை! ஆனால்.... இன்னமும் பாவம் நன்றாய் ஆளுகை செய்து அமர்ந்திருக்கிறது! **வேதபுத்தகம் இல்லாத சோதோமை** தப்பவிடாத சர்வவல்ல தேவன், வேத புத்தகங்களால் நிறைந்த அமெரிக்காவையும், இங்கிலாந்தையும், சிறிய சதவீத கிறிஸ்தவர்கள் கொண்ட உங்கள் நாட்டையும் கூட 'தப்ப விடுவார்' என ஒருக்காலும் எண்ணாதீர்கள்!

மனுஷர் சபைகளை கட்டுகிறார்கள்..... ஆனால், 'கிறிஸ்துவோ சபைக்குள்' நுழையவில்லை! வேத புத்தகங்களை அச்சிட்டு குவித்துக் கொண்டார்கள்.... ஆனால், அதை வாசிக்கவில்லை! தேவனை பற்றி ஏராளமாய் பிரசங்கிக்கிறார்கள்... ஆனால், அவரை விசுவாசிப்பதில்லை! கிறிஸ்துவைப் பற்றிய உபதேசங்களை வாரி வழங்குகிறார்கள்..... ஆனால், கிறிஸ்து வழங்கும் விடுதலையும் இரட்சிப்பும் அவர்கள் வாழ்வில் நிஜமாகவில்லை!

தியாக மிஷனெரிகளின், பரிசுத்தர்களின் பாடலை பாடுகிறார்கள், ஆனால்.... அந்த பாட்டோடு மறந்து விடுகிறார்கள்! இந்த கொடிய நிலையிலிருந்து நாம் வெளியே வர வேண்டாமா?

இன்று எந்த கான்பரன்ஸ் கூட்டத்தை, எந்த சபை நடத்தினாலும் எபேசியர் புத்தகத்தை வைத்துக்கொண்டு வேதபாடம் போதிக்க

தொடங்குகிறார்கள். நம்மை தேவன் "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்!... இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு!" (எபேசியர்.2:7,8) என வானளாவப் பேசி மக்களை மகிழ்விக்க செய்கிறார்கள். **அதாவது நமக்குள் எவ்வளவு பாவம் இருந்தாலும், மனுஷீக மூர்க்கங்கள் இருந்தாலும் நம்மை கிறிஸ்துவோடு தேவன் அமரச் செய்துவிட்டார்** என்ற போலித்தனம் இன்றைய கிறிஸ்தவத்தை மூடிவருகிறது. அன்று எபேசியருக்கு சொல்லப்பட்ட தரத்தை, இன்றுள்ள கிறிஸ்தவம் மாயம் செய்ய முயல்வது அபட்டமான பொய், அது கொடுமை! உங்களை எபேசிய சபைக்கு ஒப்பிட்டால், இன்றுள்ள தரத்தின்படி எபேசு சபையை வெளிப்படுத்தினவிசேஷத்தில் ஆண்டவர் சுட்டி காட்டியதுதான் சரியான உண்மை! ஆம், "எபேசு சபையே, நீ ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டாய்!" (வெளி.2:4) என அன்று வீழ்ந்த கிறிஸ்தவத்தின் குளிர்ந்த நிலைதான் இன்று உங்களுக்கும் பொருந்தும். இன்றுள்ள கிறிஸ்தவ சபைகள் பாவத்தை தட்டி கொடுக்கிறதே அல்லாமல், அதை தகர்த்தெறிய முன்வரும் துணிவை இழந்துவிட்டது!

**இவ்வாறு குளிர்ந்து சீர்குலைந்து, கோழையாகிப்போன ஒரு சபைக்கு இச்சையும், காமவிகாரமும், மூர்க்கமும் நிறைந்த இன்றைய பாவ சந்ததி ஒருபோதும் அடங்கி நடக்காது!**

சபை விசுவாசிகளை, இன்றைய ரேடியோவும், டெலிவிஷனும் கெடுத்து விட்டதென கூறுவதெல்லாம் இன்றைய சபைகளுக்கு நொண்டி சாக்காய் அமைந்துவிட்டது. கிறிஸ்தவ கற்பும், பரிசுத்தமும் சீர்குலைந்த உண்மையான இடம் சபைதான் என்பதை அறிந்து கொள்வோமாக. ஆதி திருச்சபைகள் சீரும் சிறப்புமான காலத்தில் அல்ல.... வேதனையும் போராட்டமும் நிறைந்த காலத்தில்தான் ஜெயம்பெற்று ஜொலித்தது! இனியும், 'உலகத்தின் முள்' என்று சொல்லாதீர்கள்..... 'சபைக்குள்முள்' என்றே நேர்மையாய் கூறுங்கள். இத்தனை கேடுகெட்ட சபையின் தரத்தை "இயசுவின் புதிய உடன்படிக்கையின் தரம்!" என அறிவிப்பதை நம்புவதற்கு கூட ஒரு கூட்ட ஜனங்கள் பேதமையில் இருப்பதுதான் ஆச்சரியமாய் இருக்கிறது! சபையில் வேர்கொண்டு நிலைத்திருக்க முயலும், அந்த பாவத்தின் வேரை, ஆவியில் பெலன் கொண்டு சுழலும் பட்டயம், அதை வேரோடு சாய்க்க வேண்டும்! இந்த ஆவியின் வல்லமையை இழந்து சபையை, 'கிறிஸ்துவின் சபை' என அழைப்பது கூட ஏற்புடையதல்ல!

– லியோனார்டு ரேவன்ஹில்

## 'கிருபையின் ஐசுவரியத்தை' இழந்து தவிக்கும் கிறிஸ்தவம்!

**உ**லகிலுள்ள எல்லா மனுஷரையும் இரட்சிக்கத்தக்க தேவ கிருபை பிரசன்னமாகி, நம்மிடத்தில் வந்திருந்தும், எல்லாரும் இரட்சிக்கப் படவில்லையே! சூரியன் எங்கும் பிரகாசித்தாலும், தன் அறையின் கதவுகள் ஜன்னல்களைச் சாத்திக் கொண்டவன் இன்னமும் இருளில்தானிருப்பான். மழை ஏராளமாய் பொழியும்போது, முற்றத்தில் பானைகள் இருந்தாலும், வாய் மூடப்பட்டிருக்கும் பானைகளுக்குள் ஒரு துளி தண்ணீர்கூட இறங்காது. உலகிலும், பொதுவாகச் சபைகளிலும் நாம் காண்கிற காரியம் அதுதான். தன்தன் மதமே போதும் என்றிருப் பவர்கள் அநேகர். தங்கள் புண்ணிய கிரியைகளால் ஈடேறலாமென்றி ருக்கிறவர்கள் அநேகர். உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் பற்றுதல் வைத்து **ஆத்துமாவை அசட்டை செய்யும்** நிர்விசாரிகள் அநேகர். உலகிலுள்ள சபைகளிலாவது கிருபைப் பெருக்கம் விளங்குகிறதா வென்று பார்த்தால், அங்கும் மன வேதனைதான் உண்டாகிறது.

தங்களைக் கிறிஸ்தவ ராஜ்யத்தார் என்று மேன்மை பாராட்டினவர்கள், இன்று கிறிஸ்துவை விட்டு விலகி அநேகமாய் உலக மக்களாகி விட்டார்கள்! நூற்றுக்கணக்கான அவர்களது ஆலயங்கள், உலக இராஜ்ஜிய தரத்திற்கு தரை மட்டமாவிட்டன! உத்தமமான, சிறுகூட்ட ஏழைச் சபைகளுக்கும் சோதனை காலம் வந்திருக்கிறது. "உங்களை கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய்விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். வேறொரு சுவிசேஷமில்லையே!" என்று அப்போஸ்தலன் கலாத்தியரைக் கடிந்துகொண்டார். கிருபையினாலே இரட்சிப்பில் பிரவேசித்த இவர்கள், மற்றவர்களுடைய தூண்டுதலால் கிருபையை விட்டு விலகி **புறஜாதிகளைப்போல் சாஸ்திர சடங்குகளின் கிரியைகளில்** நம்பிக்கை வைத்தார்கள். அதே மோசம் நமது சபைகளிலும் தாண்டவமாடுவதை காண்கிறோம்!

**சபைகள் காலக் கிரமத்தில் பலவித நூதன போதனைகளுக்கும், கொள்கைகளுக்கும், விகற்பமான உபதேசங்களுக்கும் செவிகொடுத்து கிறிஸ்துவின் கிருபையை இழந்து தவிக்கின்றன!**

சரீர நன்மைகளை, கடவுளைத் தேடாதவர்களும் துன்மார்க்கரும் சம்பூரணமாக அனுபவிக்கிறார்கள். அவர்கள் தோட்டங்கள் நல்ல

பலனைக் கொடுக்கும். அவர்கள் வயல்கள் ஆண்டவர் சொன்னது போல "நன்றாய் விளையும்." அவர்களுக்குச் சகலமும் கைகூடிவரும். ஆம், "இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கும் உலக மக்கள்" **ஆனால் இவர்கள், தேவ பக்தரும் ஜெப பிரியருமல்லர்.** "தேவன் நன்றிகெட்டவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறார்." எல்லார்மேலும் சூரியன் பிரகாசிக்கிறது. எல்லாருக்கும் மழை பெய்கிறது. இதிலே வித்தியாசமில்லை. இவைகளைக் கவனிக்கும் தேவ மக்களுக்கு மனச்சோர்வு உண்டாவது இயல்பு." என்ன ஆண்டவரே! நான் உம்மை இரவு பகல் தேடுகிறேனே, உமக்கென்றே இருக்கிறேன், உமக்கென்றே உழைக்கிறேன்.... அப்படியிருந்தும், உம்மைத் தேடாதவர்கள் நன்றாய் செழித்திருக்கிறார்களே! நானும் என் குடும்பமும் எவ்வளவோ கஷ்டப்படுகிறோமே?" என்று சிறந்த விசுவாசிகள்கூட புலம்பும் கொடிய காலமாகிவிட்டது!

ஆகிலும் கிறிஸ்துவை இன்னாரென்று அறிந்து, அவரது அளவற்ற கிருபையில் பிழைக்கும் மக்கள் பாக்கியவான்கள்! தேவன் ஒருக்காலும் அவர்களைக் கைவிடுவதில்லை. அவபக்தருடைய செல்வப் பெருக்கும், டம்பமும் நிழலைப்போல் நிலைநிற்காமல் மறைந்துபோகும். இந்த நிலையற்ற மாயத்தை நமது வாழ்க்கையில் இதுவரை எத்தனையோ கண்டாயிற்று!

உலக நன்மைகளை அவபக்தர்கள் தாராளமாய் அனுபவித்தாலும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நாம் தேடித்தான் பெற்றுக்கொள்ள வேண்டும்! தேவ கிருபையின் பிரசன்னம் உலகத்தில் அல்ல, நமது உள்ளத்தில் வெளிப்பட இடங்கொடுக்க வேண்டும்!

மதிகெட்ட ஐசுவரியவானுடைய **நிலம் நன்றாய்** விளைந்து செழித்ததுபோல, மதிகெட்ட சோம்பேறியின் **ஆத்துமா செழிக்கும்** என்று ஒருக்காலும் சொல்ல முடியாது. ஆண்டவரைத் தேடினாலும் தேடாவிட்டாலும் தேவ கிருபை நம்மை இரட்சிக்கும் என்று நினைப்பது வஞ்சகமும் துணிகரமுமாகும். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே" என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதினதுபோல.... கிறிஸ்து இன்னார் என்பதையும், நமக்காக அவருக்குள் அடங்கியிருக்கும் ஆசீர்வாதங்கள் எவை என்பதையும் நாம் அறிந்து உணரும்போதுதான், **கிருபையின் ஐசுவரியப் பெருக்கத்தை** அறிந்து அவரைப் போற்றுவோம். நிர்விசாரியான சோம்பேறியை கிருபை இரட்சிக்கும் என்று ஆண்டவர் ஒருபோதும் சொன்னதில்லை! விழித்துக்கொள்ளுங்கள், இனியாவது கிருபையின் ஐசுவரியத்தை நோக்கி உங்கள் நடையைத் திருப்புங்கள்!

– பரமானந்தம் ஐயர்

## இன்றைய சபை, பரிசுத்தாவியானவரை தள்ளிவிட்டார்களோ?

*ஒரு மெய்க்கிறிஸ்தவன் தேவஆவியானவரின் ஆளுகையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, உலகத்தின் மாயைகளுக்குத் திரும்பவுமாக அடிமைப்பட்டுவிட்டால், அசுத்தம் பிடித்த மனிதனாகிவிடுகின்றான்!*

*ஒரு கிறிஸ்தவன் வெகு ஆழமான அடிமைத்தனத்துக்குள் எப்பொழுது விழுகின்றான் என்பது உங்களுக்குத் தெரியுமா? தேவனுடைய வசனத்திற்குப் பொருந்தாத கிறிஸ்தவ மார்க்கத்தின் வெறும் சடங்காச்சார கொள்கைகளுக்குத் தன்னை அனுமதிக்கும் போதுதான்! மார்க்க அடிமைத்தனமானது திருச்சபைக்குரிய வெறும் சடங்காச்சாரம் மாத்திரமல்ல..... நமது சொந்த மனம்போல, தேவனது வழிநடத்துதலுக்கு மாறாக, நாமே நடத்திக்கொள்ளும் ஓர் வாழ்க்கை என்பதை அறியுங்கள்!!*

*சகோதரனே, தேவன் உன்னை அழைத்த பூரண சுயாதீனத்தின் விடுதலை நிலையில் உறுதியாகத் தரித்திருந்து, மீண்டும் எவ்வித மார்க்க அடிமைத்தனத்தின் நுகத்துக்குள் சிக்கிக்கொள்ளாதபடி எச்சரிக்கையாயிரு! பரிசுத்த ஆவியாகிய திராட்சரசம் எப்போதும் புதியதே, அது ஒவ்வொரு நாளும் வாழும் புதிய ஜீவன் .... அதனை நாம் பழைய திராட்சரசத் துருத்திகளில் (விட்டு வந்த சடங்கு சம்பிராதயத்திற்குள்) வார்த்து வைக்க முயற்சிப்போமானால் துருத்தியும் கிழிந்து, ரசமும் சிந்திப்போகும்!!*

> முழு உலகிலும் மிகவும் கொடியதும், வேதனை தரக்கூடியதும், செத்தகிரியையுமான காரியம் யாதெனில், ஆவியின் அபிஷேகம் பெற்ற ஒரு சிறுமந்தை அதனை இழந்து விடுவதுதான்!

*ஆவியின் அபிஷேகத்தை நாம் இழந்துவிடுவோமானால், இனி அங்கு மீந்திருப்பது யாது? 2 இராஜாக்களின் புத்தகம் 6-ம் அதிகாரத்தில் சமாரியா முற்றுக்கையிடப்பட்டபோது, அங்குள்ள மக்கள் சாப்பிடும் படியாக மீந்திருந்ததெல்லாம் என்ன? கழுதைகளின் தலைகளும், புறாக்களுக்கு போடுகின்ற பயிறும் தானே! மிகவும் விந்தையாக இருக்கின்றதல்லவா? பரிசுத்த ஆவியின் அபிஷேகம் கடந்து சென்றபின், ஒரு மனிதனில் மீந்திருப்பதெல்லாம் தேவனுடைய கண்ணோட்டத்தின்படி இவைமட்டும்தான்!! கழுதைத் தலை என்பது ஆண்டவரின் கிரியையில்லாத* **மனுஷீக மூளை அறிவுக்கு** *அடையாளமானதேயாகும்!*

*சகோதரா, தேவனுடைய சமூகத்தின் பிரசன்னத்திற்கு முன்வரும்போது, உனது உலகப்பிரகாரமான கல்விகளின் டாக்டர் பட்டங்களையும், உன்மூளை அறிவைக்கொண்டு மத்தேயு சுவிசேஷம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையான புதிய ஏற்பாட்டுப் புத்தகம் முழுவதையும் மனப்பாடமாகக் கற்றுக்கொண்ட உன் திறமைகளை யெல்லாம், அப்பால் ஓரிடத்தில் தூக்கிவைத்துவிட்டு வர, பூரண நிச்சயமுடையவனாயிரு!*

**கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாயுள்ள ஜீவஆவியின் பிரமாணத்தை அறிவதன் மூலமாகவே, நாம் தேவனுடைய பிரசன்னத்தில் சஞ்சரித்திட முடியும்! தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக டாக்டர் பட்டம் பெற்றவனும், தெருவை சுத்தம்செய்யும் தொழிலாளியும் சம அந்தஸ்துடையவர்களே!**

*நான் சொல்லுவதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். ஆம், இவர்களின் கிறிஸ்தவ மார்க்கம் மனிதனின் மண்டை அறிவின், பயனற்ற வீண் தத்துவ ஞானத்திற்கே உறைந்து போயிருக்கும்! அதிலே தெய்வீக ஆளுகையிராது!*

*ஆம், பரிசுத்தஆவியானவர் ஒரு மனிதனைவிட்டுப் போய்விட்டபின் அவனில் மீதமாயிருப்பதே புறாக்களுக்குப் போடுகிற பயிற்றுக்கு உவமிக்கப்பட்டிருக்கிறது. புறா பறந்து விட்டது! உங்கள் மனுஷீகத்தின் பயறுதான், உங்கள் வாழ்விலும் சபையிலும் மீதியாய் கிடக்கிறது!*

*இவ்வாறாக, திருச்சபையில் ஆவியானவர், வீண் சடங்காச் சாரங்களையும், பயனற்ற மார்க்க வெளிஆச்சாரங்களையும், செத்த கிரியைகளையும், பாவமாம்சத்தையும், சுயத்தையும், உலகத்தையும் முற்றிலுமாய் 'மரணத்திற்கு' ஊற்ற சொல்லுகிறபடியால், அவரை விரும்பாமல் சபையிலிருந்தே அவரை வெளியே துரத்தித் தள்ளி விட்டிருக்கின்றார்கள். பரிசுத்தம் நிறைந்த இடத்தில், அசுத்தம் உள்ளே வர விரும்பினால், தனக்கு ஆதரவாக இன்னும் ஏழு அசுத்த ஆவிகளை தன்னோடு சேர்த்துக்கொண்டு, பரிசுத்தத்தை வெளியே தள்ள முயற்சிக்கும் என்பது மிக தெளிவு! ஆனால், பரிசுத்த ஆவியானவர் திருச்சபைக்கு எத்தனை தீராத அவசியமானவர்! தனிப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அவர் எத்தனை தேவையானவர்! அவரின்றி ஜீவியம் ஏது? ஊழியம் ஏது? ஓ, உன்னதத்தில் வாசம் செய்திட வேண்டிய தாசனே, ஓ அருமை சபையை 'பரிசுத்தாவியை இழந்து' உன்னதத்திலிருந்து இறங்கி, இந்த மண்ணில் சிக்கிவிடாதே, கவனம்!!*

*– சத்திய தூது*



## சாது சுந்தர்சிங்,

### 'இரத்தம் கசிந்த' பாதமுடன் பணிசெய்த சீக்கிய மிஷனெரி!

(1889 – 1929 ல் காணப்படவில்லை)

**சீ**க்கிய குடும்பத்தில், பஞ்சாப் மாநிலத்தின் லூதியானாவில் **சுந்தர்சிங்** பிறந்தார். ஆங்கிலம் கற்றுக்கொள்ள, லூதியானாவின் கிறிஸ்தவ உயர்நிலைப்பள்ளிக்கு சென்ற அவர், தனது 14 – ம் வயதில், கிறிஸ்தவ மிஷினரிகளை அடித்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பஞ்சாபியர்களை நிந்தனை செய்து துன்புறுத்தினார்! தனது நண்பர்களுக்கு முன்னால் வேதப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் கிழித்து தீக்கொளுத்தினார்!

தன் சொந்த சீக்கிய மதத்தையும், கிறிஸ்தவ மதத்தையும், இந்து மதத்தையும் நம்ப மறுத்து, முடிவாக தன்னை மாய்த்துக்கொள்ள ரயில் தண்டவாளத்தில் நின்றார். அங்கு நின்ற அவர் **"உண்மையான தெய்வம்" யாரோ அவர் என்முன் நிற்கட்டும்!** அல்லது, என்னை நானே மாய்த்துக்கொள்வேன் என்ற அவரது நிலையில்..... இயேசுவின் தரிசனத்தை பெற்று, தன் ஆத்துமாவில் சத்தியம் ஊடுருவியதை அறிந்தார். அன்று இரவே 'தான் இன்று முதல் கிறிஸ்தவன்' என தன் தகப்பனார் சர் சிங் அவர்களிடம் கூறினார். அவருடைய தகப்பனார், சுந்தர் சிங்கை துன்புறுத்த, சகோதரர் ராஜேந்தர் சிங், சுந்தர் சிங்கை விஷம் கொடுத்து கொன்றுவிட பலமுறை முயற்சிக்க, அந்த ஊர் ஜனங்கள் அவர் மீது விஷப்பாம்புகளை தூக்கி எறிய.... ஆகிய அனைத்து சம்பவங்களிலிருந்தும் கர்த்தர் அவரை காத்துக்கொண்டார். தனது 16–ம் வயதில் சிம்லாவில் உள்ள ஒரு சபையில் ஞானஸ்நானம் எடுத்த சுந்தர்சிங் தன்னை முழுவதும் கர்த்தருடைய ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்து, இந்து சன்னியாசி காவி உடையுடன் தலைப்பாகை அணிந்து, தேவ அழைப்புடன் இந்திய மக்களுக்கு ஊழியம் செய்ய தீவிரம் கொண்டார்.

**நான் கிறிஸ்துவின் ஊழியனாய் வருவதற்கு பாத்திரன் அல்ல. ஆகிலும், என் குரு இயேசுவைப் போலவே எனக்கு வீடு வேண்டாம்! எந்த உடமையும் வேண்டாம்! அவரைப்போல் வீதிகளில் சுற்றி திரிந்து, மக்களின் துன்பத்தில் பங்குபெற்று...... தேவனுடைய இரட்சிப்பின் அன்பை ஒய்வில்லாமல் சொல்லுவேன்! என தீவிர ஊழியம் செய்தார்!** பஞ்சாப், காஷ்மீர், ஆப்கானிஸ்தான், பளுதீஸ்தான், திபேத்து, இமாச்சல், தென் தமிழ்நாடு, அயல்நாட்டு ஊழியம் என ஓயாது வெற்றுக்காலால் திரிந்த அவருக்கு "இரத்த–பாதமுடைய அப்போஸ்தலன்" என ஜனங்கள் பேசத் தொடங்கினார்கள். 1929–ம் ஆண்டு நண்பர்கள் எவ்வளவோ கூறியும் திபேத்திற்கு பயணமாய் சென்றதே அவரது கடைசி ஊழியம். அவரை வெட்டி ஆற்றில் போட்டனர் என சிலர் கூறுகின்றனர். இமாச்சல மலையில் காணாமல் போய்விட்டார் எனவும் கூறுகின்றனர். தூதர்களோடு வானத்திற்கு ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார் என்றும் கூறுகின்றனர். இன்றும் அவரது வாழ்க்கை, அவரது புத்தகங்கள் உயிரோட்டமான சவாலாய் நிலைத்திருக்கிறது!

*- கர்த்தரின் தீபங்கள்*

## மனந்திரும்புவதற்கு வாலிபமே ஏற்றக்காலம்!

"…. எனக்கு பிரியமானவைகள் அல்ல என்று சொல்லும் வருஷங்கள், சேராததற்கு முன்பு" என்ற நம் உள்ளத்தை தொடும் இந்த வசனம் வேதாகமத்திலுள்ள பிரசங்கி புத்தகத்தில் உண்டு. வாலிப பிராயத்திலேயே உலக இன்பங்களை சுவைத்து, அனுபவிக்க வேண்டுமென்ற கட்டுக்கடங்கா ஆவல், உள்ளத்தில் எழும்புகின்றது. ருசியுள்ள உணவுகளை நம் வயிறுபுடைக்க உண்டு களிக்க அந்த வாலிப பிராயம் நம்மை தூண்டுகின்றது. எந்த ஒரு காரியத்திலும் நமது வாலிப பருவம் நம்மை ஆவல் கொள்ளவும், அனுபவிக்கவும், துணிந்து செயல்படவும் நம்மை ஏவி விடுகின்றது.

ஆனால், அதற்கு முற்றும் எதிரிடையாக நமது வயதாகி போன வாழ்க்கை 'அனைத்தையும்' வெறுத்து தள்ளுகின்றது. 2சாமுவேல்.19:35–ம் வசனத்தில் கீலேயாத்தியனாகிய பர்சில்லா, தாவீது ராஜாவைப் பார்த்து "இப்பொழுது நான் எண்பது வயதுள்ளவன். இனி நலமானது இன்னதென்றும் தீதானது இன்னதென்னும் எனக்குத் தெரியுமோ? புசிக்கிறதும் குடிக்கிறதும் உமது அடியேனுக்கு ருசிகரமாயிருக்குமோ? சங்கீதக்காரர் சங்கீதக்காரிகளுடைய சத்தத்தை இனிக் கேட்கக்கூடுமோ? உமது அடியேனாகிய நான் இனி ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப் பாரமாயிருக்க வேண்டியது என்ன?" என்று துயரத்துடன் கூறுவதை நாம் காணலாம்.

"வாலிபம் தவறு என்றும், வயோதிபம் துயரம் என்றும்" கூறினான் ஓர் மூதறியன். பின் நாட்கள், துயரத்தின் நாட்களாய் மாறாமல், மகிமையான மகிழ்ச்சி வாழ்க்கையாய் உனக்கு வந்து பலிக்க, இந்த கிருபையின் காலத்தில் தானே மனந்திரும்புகள். பிற்காலங்களில், பாவ சுமை கூடுவதாலும், வயோதிபம் ஆட்கொள்வதாலும், உங்களால் மனந்திரும்புவதும் உங்களுக்கு அரிதாகி போய்விடும் என்பதை அறிவீர்களாக!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.